
JESUS I TRUST IN YOU

# இறை இரக்கத்தின் மன்றாட்டு

## தொடக்கச் செபம்:

(பிற்பகல் 3 மணிக்குப் பொருத்தமான வேண்டுதல்)

முத: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
எல்: ஆமென்.

எல்: இயேசுவே நீர் இறந்தீர். ஆனால் உமது இறப்பு ஆன்மாக்களின் வாழ்க்கை ஊற்றாகவும், இரக்கத்தின் கடலுமாகவும் வழிந்தோடியது. ஓ வாழ்வின் ஊற்றே! கண்டுபிடிக்க முடியாத இறைவனின் இரக்கமே! உலகம் முழுவதையும் உம்முள் அடக்கி, உமது இரக்கம் முழுமையும் எம் மீது பொழிந்தருளும்.

எல்: இயேசுவின் திருஇதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே! தண்ணீரே! உம் மீது நம்பிக்கை வைக்கிறேன். (மூன்று முறை)

## நம்பிக்கை அறிக்கை:

எல்: விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின்றேன். அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.

('பிறந்தார்' எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்)

இவர் தூய ஆவியால் கருவுற்று கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்திய பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த் தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோ ருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார். தூய ஆவியாரை நம்புகின்றேன். புனித, கத்தோலிக்கத் திரு அவையை நம்புகின்றேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன். பாவ மன்னிப்பை நம்புகின்றேன். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலை வாழ்வை நம்புகின்றேன். ஆமென்.

## இயேசு கற்பித்த செபம்:

முத: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எல்: எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்:

முத: அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல்: புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும். ஆமென்.

## மூவொரு இறைவன் புகழ்:

முத: தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.

எல்: தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

## செபிக்க வேண்டியக் கருத்துக்கள்:

(ஒவ்வொரு பத்து மணிக்கு முன் சொல்லவும்)

1. மக்கள் அனைவரும் மனமாற்றம் அடைந்து உமது பாதையில் நடக்கவும், உமது விருப்பம் எங்களில் நிறைவேற, வாழ்வு மலர, இல்லாமை மறைய இறைவன் தாமே கருணை புரிய வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம் திருத்தந்தைக்காகவும் அவருடைய சமரச சமாதானம் நிறைந்த கருத்துக்களை மாந்தர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும், எங்கள் பேராயர், பங்குத் தந்தையர் நல்ல உடற்சுகத்தோடு திருப்பணியைச் சிறப்பாகச் செய்ய வரமருள வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

3. இறைவனின் இறைப்பக்தி மக்களிடையே பரவி, உம்மைப் போற்றிப் புகழவும், உலகின் துன்ப துயரங்களிலிருந்து மக்கள் விடுபட்டு அவர் தம் உள்ளங்களில் இறை நம்பிக்கை உறைவிடம் காண வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

4. துயரப்படும் ஆன்மாக்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள், இன்று இறந்தோரின் ஆன்மாக்கள் எங்கள் செபக்குழுவில் இறந்த சகோதரிகளின் ஆன்மாக்கள், முடிவில்லாத வாழ்வுடன் நிலையான அமைதி அடைய வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

5. இன்றைய இளைய சமுதாயத்தினர் உமது வழியில் நடக்கவும், இங்கு கூடியுள்ள அனைவரின் தனிப்பட்ட கருத்துகளுக்காகவும், தத்தம் இல்லங்களிலிருந்து மன்றாடுபவர்களின் கருத்துக்கள் நிறைவேறவும், எல்லா குடும்பங்களும் ஆன்ம நலமும் உடல் நலமும் உமது அருளாசீரும் நிறைவாய் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

## பெரிய மணியில்:

எல்: தந்தையே இறைவா! எங்கள் ஆண்டவரும் உமது அன்பு மகனுமான இயேசு கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் எங்கள் பாவங்களுக்கும் அகில உலகின் பாவங்களுக்கும், பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

## சிறிய மணிகளில்:

முத: அவரது வேதனை நிறைந்த பாடுகளின் வழியாக...

எல்: எங்கள் மீதும் அகில உலகின் மீதும் இரக்கமாயிரும். (10 முறை)

## இறுதியில்:

எல் : அன்பின் இறைவா! எல்லாம் வல்லவரே! என்றும் வாழ்பவரே! எங்கள் மீதும் அகில உலகின் மீதும் இரக்கமாயிரும். (மூன்று முறை)

## இறுதி செபம்:

முத: இரக்கமுள்ள இயேசுவே! உம்மை நாங்கள் நம்புகின்றோம். உம்மில் எங்கள் நம்பிக்கையை வைக்கின்றோம். எங்கள் பலவீனத்திலும் இயலாமையிலும் எங்களுக்கு உதவியாக வாரும். நீர் எல்லாராலும் அறியப்படவும் அன்பு செய்யப்படவும் எங்களுக்கு வரம் தாரும். அணை கடந்த உமது அன்பில் நம்பிக்கை வைக்கவும், உமது மாட்சிக்காகவும், எங்கள் மீட்புக்காகவும், உலகிலும் எம்மிலும் உள்ள தீய சக்திகளை முறியடிக்கவும் எமக்கு வரம் அருளும்.

எல்: ஆமென்.

## ஆன்மாக்களுக்காக செபம்:

முத: ஆண்டவரே! உமது எல்லையற்ற அன்பினால் எல்லா பாவிகளையும் மன்னித்து உமது நீதியின் வழிக்கு நடத்திச் செல்லும். இவர்களையும் இவர்களுடையவர்களையும் தீமையின் கொடுமையிலிருந்து பாதுகாத்தருளும். தீமைசெய்த அனைவரையும் மீட்டருளும். இறைவனின் இரக்கம் அவர்கள் மேல் இருப்பதாக. எங்கள் ஆண்டவரே! எங்களது இறைவனும் எங்களது அனைத்தும் ஆனவரே! எங்கள் இயேசுவே! இரக்கமாயிரும். இயேசு கிறிஸ்துவே! இரக்கத்தின் அரசே! உம்மை நம்புகிறோம். இயேசு மரி சூசை! நாங்கள் உங்களை அன்பு செய்கிறோம். ஆன்மாக்களை மீட்டருளும்.

எல்: ஆமென்.

## மன்றாட்டு மாலை:

முத: ஆண்டவரே இரக்கமாயிரும்...
எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத: கிறிஸ்துவே இரக்கமாயிரும்...
எல்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
முத: ஆண்டவரே இரக்கமாயிரும்...
எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
எல்: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் நன்றாகக் கேட்டருளும்.

முத: விண்ணுலகில் இருக்கிற தந்தையாம் இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத: உலகத்தை மீட்ட திருமகனாகிய இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத: தூய ஆவியாராகிய இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத: மூவொரு இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

(உங்கள் பதில்: இயேசுவே! உம் மீது நம்பிக்கை வைக்கிறேன்.)

முத: உலகத்தை மீட்கக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: அனைத்தையும் படைக்கக் காரணமாக இருந்தஇரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: எங்களை தினமும் ஆசீர்வதிக்கும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: மூவொரு இறைவனின் பேருண்மைகளை எங்களுக்கு வெளிப்படுத்தக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: கடவுளின் வல்லமையை மனிதருக்கு வெளிப்படுத்தக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: தோற்றமற்ற விண்ணுலகப் படைப்புகளைப் படைக்கக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: ஒன்றுமில்லாமையிலிருந்து எங்களை உருவாக்கக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: உலகம் முழுவதையும் காத்து வரும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: எங்களுக்கு நிலைவாழ்வை அருளக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: நாங்கள் அடையவிருக்கும் தண்டணைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றக் காரணமாக இருக்கும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...
முத: பாவச் சேற்றிலிருந்து எங்களை மீட்டுக் கைதூக்கக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: மனித அவதாரத்தையும், பாடுகளையும் இரப்பையும் ஏற்றுக் கொள்ளக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: அனைத்து மனிதருக்கும் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் உதவியளிக்கக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: உமது அருள்கொடைகளை முன்னதாகவே எங்களுக்கு அருளக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே..

முத: தெய்வீகப் பேருண்மைகளை எங்களுக்கு வெளிப்படுத்திய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: திருஅவையை நிறுவியதில் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: அருள்அடையாளக் கொடைகளில் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: திருமுழுக்கிலும் ஒப்புரவிலும் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: திவ்விய நற்கருணையிலும் குருத்துவத்திலும் நீர் தந்தருளிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: பாவிகளை மனம் திருப்புவதில் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: நம்பிக்கையற்றோர் ஒளிபெறுவதில் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: நீதிமான்களின் புனிதத்தில் நீர் காட்டும் இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: உமது திருக் காயங்களிலிருந்து வழிந்தோடிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: உமது திரு இதயத்திலிருந்து வழிந்தோடிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: இரக்கத்தின் தாயாகிய புனித கன்னி மரியாவை எங்களுக்குத் தாயாகத் தரக் காரணமாக இருந்த இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: நோயாளிகளுக்கும் துன்பப்படுவோர்களுக்கும் ஆறுதலான இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: நொறுங்கிய இதயங்களுக்கு ஆறுதலான இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: கலங்கித் தவிக்கும் ஆன்மாக்களின் ஆறுதலான இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: இறந்தோரின் அடைக்கலமாகிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: துன்பப்படும் ஆன்மாக்களின் ஆறுதலான இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: புனிதர்கள் அனைவரின் விண்ணுலக மகிழ்ச்சியாகிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: மீட்கப்பட்ட அனைவரின் விண்ணுலக மகிழ்ச்சியாகிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத: அற்புதங்களின் வற்றாத ஊற்றாகிய இரக்கத்தின் அரசராகிய இயேசுவே...

முத:	உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!
எல்:	எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.
முத:	உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!
எல்:	எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
முத:	உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே!
எல்:	எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத:	ஆண்டவருடைய இரக்கம் அவருடைய எல்லா படைப்புகளிலும் உள்ளது.
எல்:	ஆதலால் ஆண்டவருடைய இரக்கத்தை என்றென்றும் பாடுவேன்.

முத:	செபிப்போமாக! கருணை நிறை இறைவா! இரக்கத்தின் தந்தையே! ஆறுதலின் ஆண்டவரே! உம் மீது நம்பிக்கை கொண்ட ஆன்மாக்கள் மீது இரக்கம் கொண்டீரே! உமது அளவற்ற இரக்கத்தைக் குறித்து எங்கள் பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இந்தத் துன்ப உலகில் எங்களுக்கு நேரிடும் பெரிய சோதனைகளிலும் உமக்கு நம்பிக்கையுடன் இருக்க உமது இரக்கத்தின் அருள் கொடைகளை எங்கள் மீது நிறைவாகப் பொழிந்தருளும். என்றும் வாழ்பவரும், எல்லாம் வல்லவருமாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.
எல்:	ஆமென்.

## இறை இரக்கத்தின் நவநாள்

### முதல் நாள்:

'இன்று மனுக்குலம் முழுவதையும், சிறப்பாகப் பாவிகள் அனைவரையும் என்னிடம் கூட்டி வந்து, என் இரக்கக் கடலில் முழ்க வை. இதன் மூலம் ஆன்மாக்களின் இழப்பினால் கடும் துயரத்தில் ஆழ்ந்துள்ள எனக்கு ஆறுதலளிப்பாய்.'

மனுக்குலம் முழுவதும், குறிப்பாகப் பாவிகள் இறைவனின்
இரக்கத்தை அடைய வேண்டுமென்று மன்றாடுவோமாக.

முத:	இரக்கம் நிறைந்த இயேசுவே! எங்களுக்கு இரக்கமும் மன்னிப்பும் அளிப்பவரே! எங்கள் பாவங்களைப் பாராமல் உமது அளவற்ற நன்மைத்தனத்தில் நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பாரும். கருணை மிகுந்த உமது இதயத்தில் எங்களை ஏற்றுக் கொள்ளும். எவரும் அதிலிருந்து பிரிந்து போக விடாதேயும். மூவொரு இறைவனில் தந்தையோடும் தூய ஆவியாரோடும் உம்மைப் பிணைக்கும் அன்பினால் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.
எல்:	ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத:	எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்த இதயத்திலே நம்பிக்கை வைத்துள்ள மனுக்குலத்தின் மீது உமது கருணைக் கண்களை திருப்பியருளும். அவரது துயரம் நிறைந்தப் பாடுகளைப் பார்த்து எங்களுக்கு உமது இரக்கத்தைக் காட்டியருளும். எல்லாம் வல்ல உமது இரக்கத்தை என்றென்றும் போற்றுவோமாக.

எல்:	ஆமென்.

## 2ம் நாள்:

‘இன்று குருக்கள், துறவியரின் ஆன்மாக்களை என்னிடம் அழைத்து வந்து ஆழம் காண முடியாத எனது இரக்கத்தில் மூழ்க விடு. எனது கசப்பானப் பாடுகளை நான் சகித்துக் கொள்ள எனக்கு வல்லமை அளித்தவர்கள் இவர்களே. வாய்க்கால்களாகிய இவர்கள் வழியாக எனது இரக்கம் மனுக்குலத்தின் மேல் பாய்கிறது.’

இறைவனின் இரக்கம் மனுக்குலத்தின் மீது பெருக வழி வகுக்கும் அருள்பணியாளர்கள், துறவரத்தார் அனைவருக்காவும் மன்றாடுவோமாக.

முத:	இரக்கம் நிறைந்த இயேசுவே! உம்மிடமிருந்தே எல்லா நன்மையும் வருகின்றன. அருள்பணியாளர்கள், துறவரத்தார் அனைவரின் ஆன்மாக்களில் உமது அருள்கொடைகள் பெருகச் செய்யும். அதனால் அவர்கள் தமது பணிகளை தக்கவிதமாகவும், பயன் தரக்கூடியதாகவும் நிறைவேற்றி தமது சொல்லாலும், செயலாலும் அனைவரையும் இறை இரக்கத்தில் ஈர்க்கச் செய்வார்களாக.

எல்:	ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத:	எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உமது திராட்சைத் தோட்டதிற்கென நீர் தெரிந்துள்ள உமது அருள்பணியாளர்கள், துறவரத்தார் அனைவரின் ஆன்மாக்கள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். உமது திருமகனின் அன்புக்குப் பாத்திரமான இவர்கள் மீது உமது ஆசீரை உறுதிப்படுத்தி, எல்லாரையும் மீட்புப் பாதையில் வழிநடத்த ஞானத்தையும், உமது இரக்கத்தை நோக்கி அவர்களை ஈர்க்கின்ற சக்தியையும் அளித்தருளும்.

எல்: ஆமென்.

## 3ம் நாள்:

‘இன்று பக்தி பிரமாணிக்கமுள்ள அனைத்து ஆன்மாக்களையும் அழைத்து வந்து, என் இரக்க சமுத்திரத்தில் மூழ்க வை. என் சிலுவையின் பாதையில் இவர்கள் எனக்கு ஆறுதலாய் இருந்தார்கள். கசப்பான துயரக் கடலின் நடுவில் எனக்கு கிடைத்த ஒரு துளி ஆறுதல் இவர்கள் தான்.’

பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! உமது இரக்கக் கருவூலத்திலிருந்து எல்லாருக்கும் உமது அருளை ஏராளமாக பொழிகின்றீர். இரக்கத்தின் இருப்பிடமாகிய உமது இதயத்தினுள் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரையும் ஏற்றருளும். அங்கிருந்து அவர்கள் பிரிந்து போக விடாதேயும். ஆவியாரோடு உம்மைப் பிணைக்கும் அன்பின் பேரால் உம்மை இரந்து மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உமது திருமகனின் வாரிசுகளாகிய உமது விசுவாசிகள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். துன்பம் நிறைந்த அவரது திருப்பாடுகளின் பெயரால் இவர்களுக்கு உமது ஆசீரை வழங்கி, உமது இடைவிடாதப் பராமரிப்பால் இவர்களை அரவணைத்து, அவர்கள் உம் மீது கொண்ட அன்பையும், தமது விசுவாசத்தையும் ஒருபோதும் இழக்காமல் தேவதூதர் புனிதர் சேனைகளுடன் உமது எல்லையில்லா இரக்கத்தை என்றென்றும் மாட்சிப்படுத்துவார்களாக.

எல்: ஆமென்.

## 4ம் நாள்:

'இன்று என்னை விசுவசியாதவர்களையும் இன்னும் என்னை அறியாதவர்களையும் என்னிடம் அழைத்து வா. எனது கசப்பான பாடுகளின் போது இவர்களையும் நினைத்துக் கொண்டேன். என்னை அறிய வேண்டுமென்ற இவர்களது எதிர்கால ஆர்வம் என் இதயத்திற்கு ஆறுதலாய் இருந்தது. என் மாபெரும் இரக்கக் கடலில் இவர்களை மூழ்க வை.'

இறைவனின் இரக்கத்தை இன்னும் அறியாத மக்களுக்காக மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! நீரே உலகின் ஒளி. உம்மை இன்னும் அறியாத மக்களை இரக்கத்தின் உறைவிடமாகிய உமது இதயத்தினுள் ஏற்றருளும். உமது அருள்கதிர்களால் இவர்களுக்கு ஒளியூட்டி, எங்களோடு இவர்களும் இணைந்து என்றென்றும் உமது அற்புத இரக்கத்தைப் போற்றச் செய்யும்.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்த இதயத்தை விசுவசியாதவர்கள் மீதும், இன்னும் அறியாத மக்கள் மீதும் கருணையோடு

கண்ணோக்கியருளும். இவர்களையும் நற்செய்தியின் ஒளிக்குள் இழுத்தருளும். உம்மை அன்பு செய்வது எத்துணை இன்பம் என்பதை உணர்ந்து, இவர்களும் உமது இரக்கத்தை என்றென்றும் வாழ்த்திப் போற்ற வரமருளும்.

எல்: ஆமென்.

## 5ம் நாள்:

'இன்று பிரிந்து போன சகோதரர்களின் ஆன்மாக்களைக் கொணர்ந்து என் இரக்கப் பெருங்கடலில் அமிழ்த்து. என் கசப்பானப் பாடுகளின் போது எனது உடலையும், உள்ளத்தையும் இவர்கள் கிழித்தவர்கள். திருச்சபையின் ஒற்றுமைக்கு இவர்கள் திரும்பி வந்து சேர்ந்தால்தான் என் காயங்கள் குணமாகும். இதன் வழியாக என் பாடுகளின் அகோரத்தை அவர்கள் தணிப்பார்கள்.'

விசுவாசத்தில் தவறுவோருக்காகச் மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! நன்மையின் உருவே! உமது ஒளியைத் தேடும் எவரையும் நீர் மறந்ததில்லை. பிரிந்து போன எம் சகோதரர்களை இரக்கத்தின் உறைவிடமாகிய உமது இதயத்தினுள் ஏற்றருளும். திருஅவையின் ஒன்றிப்பில் இவர்கள் இணைய உமது ஒளியை இவர்களுக்கு அளித்தருளும். இவர்களும் எங்களோடு இணைந்து என்றென்றும் உமது இரக்கக் கொடைகளைப் பெற்றுக் கொள்வார்களாக.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! பிரிந்து போன எமது சகோதரர்களின் ஆன்மாக்கள் மீது சிறப்பாக உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். அவர்களது குறைகளைப் பாராமல் 'அவர்கள் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக' என்று உமது இறப்புக்கு முன் உம்மை நோக்கி உருக்கமாக மன்றாடிய உமது திருமகனின் அன்பையும், அவர் அனுபவித்த கசப்பானக் பாடுகளையும் கண்ணோக்கியருளும். இவர்கள் மீண்டும் அந்த ஒன்றிப்பில் இணைந்து என்றென்றும் உமது இரக்கத்தைப் போற்றுவார்களாக.

எல்: ஆமென்.

## 6ம் நாள்:

'இன்று சாந்தமும் தாழ்ச்சியுமுள்ள ஆன்மாக்களையும், சிறியோரின் ஆன்மாக்களையும் என்னிடம் அழைத்து, என் இரக்கத்தில் மூழ்க வை. இவர்கள் என் இதயக் கசப்பான வேதனையின் போது எனக்கு வல்லமை அளித்தவர்கள். இவர்கள் எனது பீடங்களின் அடியில் கண்விழித்துக் காத்திருக்கும் வானதூதர்களாக இவர்களை நான் காண்கிறேன். இவர்கள் மேல் என் அருளைப் பொழிவேன். தாழ்ச்சியுள்ள இந்த ஆன்மாக்களே எனது அருளைப் பெற முடியும். இவர்கள் மட்டுமே என் நம்பிக்கைக்கு உரியவர்கள்.'

சிறியோருக்காகவும் அவர்களைப் போல் இருப்பவர்களுக்காகவும் மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! 'நான் சாந்தமும் இதயத் தாழ்ச்சியும் உள்ளவன். என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்' என்று நீரே சொல்லியிருக்கிறீர். சாந்தமும் தாழ்ச்சியுமுள்ள ஆன்மாக்களையும் சிறியோரின் ஆன்மாக்களையும் இரக்கம் மிகுந்த உம் இதயத்தில் ஏற்றருளும். இவர்கள் வானுலகைப் பரவசத்தில் ஆழ்த்தி உமது விண்ணகத் தந்தையின் அரியணையின் முன் மணம் வீசும் மலர்களாகத் திகழ்வார்களாக. உமது திரு இதயத்தில் நிலையான இடம் கொண்டு இறைவனின் இரக்கத்தை இடையறாது போற்றுவார்களாக.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! சாந்தமும் தாழ்ச்சியும் உள்ள உம் அடியார்கள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இவர்கள் உமது திருமகனின் சாயலை மிகவும் ஒத்திருக்கிறார்கள். இந்த ஆன்மாக்களில் நறுமணம் மண்ணுலகிலிருந்து எழுந்து உமது அரியணையை அடைகிறது. இரக்கத்தின் தந்தையே! இந்த ஆன்மாக்கள் மீது உமக்குள்ள அன்பையும், இவர்கள் மீது உமக்குள்ள மகிழ்ச்சியையும் கொண்டு, எங்களையும், இந்த உலகம் முழுவதையும் ஆசீர்வதித்தருளும். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உமது இரக்கத்தை என்றென்றும் போற்றுவோமாக.

எல்: ஆமென்.

## 7ம் நாள்:

'இன்று எனது இரக்கத்தைச் சிறப்பாக மகிமைப்படுத்தி வணங்கும் ஆன்மாக்களை அழைத்து வந்து என் இதய இரக்கத்தில் மூழ்கச் செய். இவர்கள் என் பாடுகளை எண்ணி வருந்தி, என் ஆன்மாவோடு ஆழ்ந்து ஒன்றித்திருக்கிறார்கள். என் இரக்கமுள்ள இதயத்தின் உயிருள்ள சாயல்கள் இவர்கள். இவ்வான்மாக்கள் மறுவாழ்வில் சிறப்பான ஒளியோடு துலக்குவார்கள். ஒருவரும் நரக நெருப்பிற்கு ஆளாக மாட்டார்கள். இறப்பின் வேளையில் இவர்கள் ஒவ்வொருவரையும் நான் பாதுகாப்பேன்.'

இறை இரக்கத்தில் பக்தி கொண்டு அதனை பரப்புவதன் மூலம் இயேசுவின் இரக்கம் நிறைந்த இதயத்தின் உயிருள்ள சாயலாக விளங்குவோருக்காக மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! அன்பையே இதயமாகக் கொண்ட இறை இரக்கத்தின் மேன்மையைச் சிறப்பாகப் போற்றி வணங்கும் ஆன்மாக்களை உமது இரக்கம் நிறைந்த இதயத்தினுள் ஏற்றுக்கொள்ளும். இவர்கள் இறைவனிடமிருந்தே இந்த வல்லமையைப் பெறுகின்றனர். துன்ப துரிதங்களின் நடுவே நீர் மனுக்குலத்தற்காகப் பட்ட பாடுகளில் இவர்கள் பங்கு கொள்ள விழைகின்றார்கள். மென்மேலும் பெருகும் உமது இரக்கத்தால் இவர்களை

அரவணைத்து, விடாமுயற்சி, திடம், பொறுமை ஆகிய புண்ணியங்களை இவர்களுக்கு அளித்தருளும்.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உமது ஆழம் காண முடியாத இரக்கத்தை உருக்கமாகப் போற்றி வணங்கும் ஆன்மாக்கள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இவர்கள் தங்கள் சொல்லாலும் செயலாலும் உம்மை மட்டுமே மகிமைப்படுத்துகின்றனர். இந்த ஆன்மாக்கள் நற்செய்தியின்படி வாழ்பவர்கள். உமது இரக்கத்தைத் தங்களது வாழ்வில் கடைப்பிடிப்பவர்கள். இவர்கள் உம் மீதும், உமது வாக்குறுதிகள் மீதும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஏற்ப இவர்களுக்கு உமது மேலான இரக்கத்தை காட்டுமாறு உம்மை வேண்டுகிறோம். உமது சொந்த மகிமையைப் போன்று இவர்களது வாழ்விலும், குறிப்பாக, இவர்களது இறப்பின் வேளையிலும் இவர்களைப் பாதுகாத்தருளும்.

எல்: ஆமென்.

## 8ம் நாள்:

'இன்று உத்தரிக்கும் தலத்திலிருக்கும் ஆன்மாக்களைக் கொணர்ந்து என் இரக்கத்தின் ஆழத்தில் அமிழ்த்து. என் இரத்தம் இவர்களைச் சுட்டெரிக்கும் தீயை குளிரச் செய்யட்டும். இந்த ஆன்மாக்கள் என்னால் அதிகம் அன்பு செய்யப்பட்டவர்கள். என் நீதிக்கு பரிகாரம் செய்கின்றார்கள். இவர்களுக்கு விடுதலை அளிப்பது உங்கள் கைகளில் இருக்கிறது. என் திருஅவை அளிக்கும் எல்லா பலன்களையும் இவர்களுக்கு ஒப்புக்கொடு. இவர்கள் செலுத்த வேண்டியக் கடனை நீயே தீர்ப்பாய்.'

இறை நீதிப்படி உத்தரிக்கும் தலத்திலுள்ள ஆன்மாக்களுக்காக மன்றாடுவோமாக. இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் அவர்களின் வேதனையைத் தணிப்பதாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! 'என் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்' என்று மொழிந்தீரே. இறைவனுடைய நீதிக்குப் பரிகாரம் செய்ய வேண்டியவர்களை இரக்கம் நிறைந்த உமது இதயத்தினுள் ஏற்றருளும். உமது இதயத்திலிருந்து பீறிட்டு வரும் இரத்தமும் தண்ணீருமாகிய ஊற்று இவர்களைச் சூழ்ந்திருக்கும் அனல் பிழம்புகளை அணைக்கட்டும். இதனால் உமது இரக்கத்தின் வல்லமை போற்றப்படுவதாக.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! உத்தரிக்கும் தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்கள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். உமது திருமகன் இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகளின் பெயராலும் அவரது திரு இதயத்தில் நிறைந்த துயரத்தின் பெயராலும் உம்மை மன்றாடுகிறோம். உமது நீதியின் தீர்ப்பினால் வேதனைப்படும் இந்த ஆன்மாக்கள் மீது உமது இரக்கத்தைக் காட்டியருளும். உமது திருமகன் இயேசுவின் இரக்கம், அவரது நீதியைவிட மேலோங்கி நிற்பதால் அவரது திருக்காயங்களின் வழியாக இவர்களை கண்ணோக்கியருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

## 9ம் நாள்:

'இன்று வெதுவெதுப்பான ஆன்மாக்களை என்னிடம் அழைத்து வந்து எனது இரக்கத்தில் மூழ்க விடு. இந்த ஆன்மாக்கள் என் உள்ளத்தை மிகவும் நோகச் செய்கிறார்கள். இந்த ஆன்மாக்களால் தான் நான் கெத்சமெனிப் பூங்காவில் பங்கர வேதனைகள் அனுபவித்தேன். 'தந்தையே, உமக்குத் திருவுளமானால் இக்கிண்ணம் என்னை விட்டு அகலட்டும்' என்று நான் கூறியதற்குக் காரணம் இவர்களே. என் இரக்கத்தை நோக்கி ஒடி வருவதுதான் இவர்களது மீட்பின் கடைசி நம்பிக்கை.'

ஒலிவத் தோப்பில் இயேசு கிறிஸ்துவுக்குப் பயங்கர வேதனை ஏற்படக் காரணமாக இருந்த வெதுவெதுப்பான ஆன்மாக்களுக்காக மன்றாடுவோமாக.

முத: இரக்கம் நிறைந்த இயேசுவே! நீர் நன்மையே உருவானவர். ஒலிவத் தோப்பில் உமக்கு மிகுந்த வேதனையும் அருவருப்பும் உண்டாக்கிய நடைப்பிணங்களைப் போன்ற வெதுவெதுப்பான இந்த ஆன்மாக்களை உமது இரக்கம் நிறைந்த இதயத்தினுள் ஏற்றருளும். உமது தூய அன்பின் அக்கினி நெருப்பில் இவர்களை மூழ்கச் செய்யும். இதனால் இவர்கள் உமது எல்லையற்ற கருணையை என்றென்றும் போற்றிப் புகழ்வார்களாக.

எல்: ஆமென்.

(கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், மூவொரு இறைவன் புகழ்)

முத: எல்லாம் வல்ல இறைவா! இரக்கத்தின் தந்தையே! வெதுவெதுப்புள்ள இந்த ஆன்மாக்கள் மீது உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளாலும், சிலுவையில் மூன்று மணி நேரம் அவர் அனுபவித்த வேதனைகளாலும் இந்த ஆன்மாக்களுக்கு, உமது மாட்சி மீது ஒரு புதிய ஆவலை ஊக்குவிக்க உம்மை இரந்து மன்றாடுகிறோம். உமது அன்பால் ஊட்டம் பெறும் இவர்கள் இரக்கச் செயல்கள் புரிந்து, என்றென்றும் உமது இரக்கத்தைப் போற்றி புகழ்வார்களாக.

எல்: ஆமென்.

## குருக்கள் துறவியருக்காக செபம்

மிகுந்த இரக்கமுள்ள இயேசுவே! உம்மிலிருந்து எல்லா நன்மையும் புறப்படுகின்றது. உமது குருக்கள், துறவியர், கன்னியர் இவர்களின் ஆன்மாக்களில் உமது அருள் பெருக உதவியருளும். அதன் வழி அவர்கள் உமது திராட்சைத் தோட்டத்தில் தங்கள் கடமைகளைத் தகுந்த முறையிலும், கனி தரும் முறையிலும் ஆற்றுவார்களாக. நிலையான தந்தையே! உமது திராட்சைத் தோட்டத்தின் ஊழியர்களாகிய குருக்கள் துறவியர் கன்னியர் இவர்களின் ஆன்மாக்களை உமது திரு மகனும், எங்கள் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட அன்பைப் பெற்றவர்கள் என்னும் முறையில் உமது ஆசீரின் வல்லமையை அவர்கள் மீது பொழிந்தருளும். எல்லோரையும் மீட்பின் பாதைக்கு வழி நடத்திச் செல்லவும், உமது இரக்கத்தைப் பெற்றுத் தரவும் அவர்களுக்குச் சிறந்த ஞான ஒளியைத் தந்தருளும். ஆமென்.

## இறை அழைத்தலுக்காக செபம்

தந்தையே இறைவா! 'இன்று அறுவடையோ மிகுதி. வேலையாள்களோ குறைவு. ஆகையால் அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்' என்று உம் திருமகன் கிறிஸ்து வழியாக மொழிந்தீர். உமது மீட்பின் திட்டத்தில், மக்களின் மீட்புக்காக உழைக்கின்ற மேய்ப்பர்களைத் தர முழு நம்பிக்கையோடு வேண்டுகிறோம். நீர் ஏற்கனவே தேர்ந்தெடுத்துள்ளவர்களை உமது ஆற்றலாலும் அன்பாலும் நிரப்பி, உமது அழைத்தலை ஏற்று, துறவற சகோதர சகோதரிகளாக மற்றும் உமது நற்செய்தியைத் தகுந்த முறையில் எடுத்துரைக்கும் பணியாளர்களாக உருவாக உமது அருளைப் பொழிய வேண்டுமென எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## புனித பவுஸ்தினாவின்
## மன்றாட்டினால் வரங்களடைய செபம்

இயேசுவே! உமது அடியாராகிய பவுஸ்தினாவை உமது எல்லையற்ற இரக்கத்தின் பக்தியால் நிரப்பினீரே. உமக்கு விருப்பமானால் அவரது மன்றாட்டின் வழியாக நாங்கள் மன்றாடிக் கேட்கும் வரங்கள் அனைத்தையும் எங்களுக்குத் தந்தருளும். எங்களது பாவங்களினால் உமது இரக்கத்திற்கு நாங்கள் அருகதையற்றவர்களானோம். ஆனால் முக்திபேறு பெற்ற பவுஸ்தினாவின் தியாகத்தையும் தன் மறுப்பையும் பார்த்து இவரது மன்றாட்டின் வழியாக குழந்தைக்குரிய நம்பிக்கையோடு நாங்கள் உம்மிடம் வேண்டிக் கேட்கும் விண்ணப்பங்களை எங்களுக்கு அருளி இவரது தூய வாழ்விற்குப் பலன் அளிப்பீராக. ஆமென்.

'எனது இரக்கத்தை இரந்து கேட்கும் ஆன்மாவின் எந்த வேண்டுதலையும் நான் மறுக்க மாட்டேன். எனது இரக்கத்தின் ஊற்றிலிருந்து அவர்கள் உற்சாகமும் பலமும் பெறுவதோடு தங்களுக்குத் தேவையான எல்லா அருள் வரங்களையும் அடைந்து கொள்வார்கள்' என்று இரக்கம் நிறைந்த இறை மகன் இயேசு கிறிஸ்து தாம் இறந்த வெள்ளிக்கிழமையன்று தன்னைத் தேடி வருபவர்களுக்குத் தனது எல்லையற்ற இரக்கத்தை வாரி வழங்குவதாக புனித பவுஸ்தினாவிற்கு வாக்களித்துள்ளார்.

************